**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 180/2018 | Date | : | 15.07.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.5 | Taluk | : | |
| Name | : | கணேசன் | Calling | : | |
| Father Name | : | வீரப்பன் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.07.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.03.2018ம் தேதி காலை 08.30 மணிக்கு அறிவுசார் சொத்துரிமை அமலாக்க கோவைப்பிரிவில் காவல் ஆய்வாளராக திரு.தொல்காப்பியர் என்பவர் பொறுப்பில் இருந்தபோது, வாதி மணிகண்டராஜா , PREMIER கம்பெனியின் மேனேஜர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினை பெற்றும், கோவை சொத்துரிமை அமலாக்க கோவைப்பிரிவு நிலைய குற்ற எண். 82/2018 சட்டப்பிரிவு 51 r/w 63(A) COPY RIGHT ACT and 420 IPC பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தும் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளராக திரு.தொல்காப்பியர் எடுத்துக்கொண்டார்.

2. பின்னர் சம்பவ இடமான 1369/1, ஜீவானந்தம் தெரு, எடீசியா இண்டஸ்டீரியல் எஸ்டேட்,பகுதிக்கு மாலை 17.30 மணிக்கு சென்றும், சோதனை செய்வது குறித்து தணிக்கை நமூனா மூலம் மேற்படி தன்ரூபாராம் சௌத்ரி,

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.15 17:20:28 +0530

த/பெ.மெஹாராம்ஜி சௌத்ரிக்கு தெரிவித்தும் சோதனை செய்ததில் PREMIER கம்பெனி போலவே போலியாக Prashanth Premiarஎன்ற பெயரில் போலியான குக்கர்களை தயாரித்து விற்பனை செய்ய வைத்திருந்தது உறுதியானது. ஆகவே அங்கு இருந்த மேற்படி கம்பெனியின் உரிமையாளர் தன்ரூபாராம் சௌத்ரி என்பவரை விசாரிக்க அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை வழக்கின் நிமித்தம் காரணமாக 19.00 மணிக்கு கைது செய்தார்.

பின்னர் உடன் அழைத்துச்சென்ற தலைமை காவலர்கள் 1325 சிவக்குமார் மற்றும் 1319 குபேந்திரன் ஆகியோர் முன்னிலையில் மேற்படி எதிரியை அன்றைய தேதியிலேயே விசாரிக்க அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அத்துடன் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எடுத்து ஆஜர் செய்த போலியான 12லிட்டர் Prashanth Premiar – 23, 3லிட்டர் Prashanth Premiar – 57, 12லிட்டர் Prashanth Premiar குக்கரின் அடிபாகம் மட்டும் – 15, 5லிட்டர் Prashanth Premiar குக்கரின் அடிபாகம் மட்டும் – 15, Prashanth Premiar டை ஒரு செட் – 1, ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் திரு.தொல்காப்பியர் கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்து கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்தும், அவர்களது வாக்குமூலத்தை பதிவுசெய்தார்.

பின்பு வழக்குச்சொத்து மற்றும் கைது செய்யப்பட்ட எதிரி தன்ரூபாராம் சௌத்ரி என்பவரை நிலையம் கொண்டு வந்தும், கைது குறித்து அவரது உறவினருக்கு முறைப்படி தெரிவித்தும், பின்னர் அடைப்புகாவல் அறிக்கை தயார் செய்தும், எதிரியையும், கைப்பற்றிய சொத்தையும் படிவம் 91 ன் மூலம் தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். பின்னர் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்புகளை நிலையத்தில் ஒப்படைத்தார்.

நான் இந்த வழக்கு கோப்புகளை கடந்த 23.05.2018 ஆம் தேதி படிவம் 91ஐ பார்வையிட்டு அன்றைய தினம் இவ்வழக்கு சொத்துக்களை இந்நீதிமன்றத்திற்கு மீளப்பணிந்து அன்றைய தினம் ஒப்படைத்தேன். கடந்த 09.07.2018 ஆம் தேதி இவ்

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.15 17:20:37 +0530

வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற எண் 82/2018 சட்டப்பிரிவு 51 r/w 63(A) COPY RIGHT ACT and 420 IPCன் படிகுற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. வீடியோ VPCல் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த சமயத்தில் அறிவு சார் சொத்துரிமை அமலாக்க பிரிவுக்கு என்று தனியாக CCTNS குற்ற இறுதி அறிக்கை பதிவேற்றம் செய்ய முடியவில்லை. பின்னிட்டு தற்போது தனியாக பதிவேற்றம் செய்ய முடியும் மேலும் இந்த வழக்கு சம்பந்தமான வாக்குமூலங்கள் அனைத்தும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு என்றுதான் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. குற்றவியல் நடைமுறை சட்டத்தின் படி அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு என்று காவல் நிலையம் அமைக்கப்படாததால் எங்களுக்கு ஒரு வழக்கை பதிவு செய்யவோ, புலன் விசாரணை செய்யவோ, குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்யவோ, அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. இதச பிரிவு 420 இன் கீழ் வேண்டுமென்றே எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.10 ஆவணம் என்னுடைய விசாரணையில் என்னுடைய கவனத்திற்கு வந்ததா என்றால் மேற்படி ஆவணம் இருந்தால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியும். பவர் பத்திரம் இருந்தால்தான் வழக்கு பதிவு செய்யப்படுமா என்றால் அதனையும் பார்வையிடுவோம்.

3. மேற்படி ஆவணங்களை குற்ற இறுதி அறிக்கையில் உள்ள ஆவணங்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். இ.த.ச. பிரிவு 420 இன் கீழ் வேண்டுமென்றே எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.10 ஆவணம் என்னுடைய விசாரணையில் என்னுடைய கவனத்திற்கு வந்ததா என்றால் மேற்படி ஆவணம் இருந்தால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியும். பவர் பத்திரம் இருந்தால் தான் வழக்கு பதிவு செய்யப்படுமா என்றால் அதனையும் பார்வையிடுவோம்.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.15 17:20:43 +0530

4. மேற்படி ஆவணங்களை குற்ற இறுதி அறிக்கையில் உள்ள ஆவணங்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.9 மற்றும் அ.த.சா.10 ஆவணங்கள் ஜெராக்ஸ் என்றால் சரிதான். புகாரிலேயே பிரீமியர் என்ற பெயரை TRADE MARKல் பதிவு செய்ததாக புகார்தாரர் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். TRADE MARK சட்டத்தின்படி பதிவு செய்யப்பட வேண்டிய வழக்கை COPYRIGHT ACTன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. புகார் கம்பெனியின் Technical Teamஐ விசாரணை செய்தேனா என்றால் விசாரித்தேன் ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான் விசாரணை செய்யவில்லை என்றும், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. CCTNS ல்பதிவு செய்ய முடியவில்லை என்று தற்போது வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பதிவு செய்தது புலன் விசாரணை செய்தது, சொத்துக்களை பறிமுதல் செய்தது ஆகியவை அனைத்தும் சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.15 17:20:49 +0530

Judicial Magistrate No.III,

Erode.